

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10.11.2025 அன்று சென்னை, சேப்பாக்கம் லாக்நகர் பகுதியில் மத்திய பக்கிங்ஹாம் கால்வாயில் இருபுறமும் கற்கள் பதித்து கரைகள் சீரமைக்கும் பணிகள் மற்றும் கால்வாய் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி நிலை குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 10.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை, நந்தனத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை சார்பில் நடந்த விழா:

# முத்தமிழறிஞர் கலைஞரைப் போல் காலத்துக்கு ஏற்ப தொழில்நுட்பங்களில் உங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்!

## மாணவர்களுக்கு பணி நியமன ஆணை—ஊக்கத்தொகையையும் வழங்கி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, நவ.13 -

**சென்னை, நந்தனத்தில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை சார்பில் நடந்த விழாவில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் 'வெற்றி நிச்சயம்' திட்டத்தில் பல துறைகளில் பயிற்சி முடித்தவர்களுக்கு, பணி நியமன ஆணைகளையும் பயிற்சியில் இருப்பவர்களுக்குத் திறன் ஊக்கத்தொகையையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.**

**அப்போது அவர், ``இன்னும் பலருக்கு பயிற்சியும் வேலைவாய்ப்பும் வழங்கும் வகையில், தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தானது கூடுதல் மகிழ்ச்சி. 'வெற்றி நிச்சயம்' திட்டத்தின் மூலம் புதிய திறன்களைப் பெற்றுள்ள அனைவரும் வாழ்வில் வெற்றிபெற வாழ்த்துகள்" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பாக வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ், பயிற்சியைத் தொடங்கி வைப்பதிலும், இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகள் மற்றும் திறன் ஊக்கத்தொகை வழங்குவதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த நாள் முதல், இளைஞர்களின் வேலைவாய்ப்புக்குத் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் நம்முடைய அரசு மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய பிறந்த நாளில், மார்ச் 1-ஆம் தேதி அன்று, தன்னுடைய கனவுத் திட்டம் என்றுதான் இந்த 'நான் முதல்வன்' திட்டத்தை அறிவித்துத் தொடங்கி வைத்தார்.

### வெற்றி நிச்சயம் திட்டம்

இந்த நான்கு வருடங்களில், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 42 லட்சம் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை, நம்முடைய அரசு வழங்கி இருக்கின்றது. அது மட்டுமல்ல, 3 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பையும் நம்முடைய அரசு வழங்கி இருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத்தான், இன்றைக்கு தமிழ்நாட்டு ஸ்கில் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் மூலமாக இந்த 'வெற்றி நிச்சயம்' திட்டமும் செயல்படுத்தப்படுகின்றது.

இதன் மூலமாகப் பள்ளி, கல்லூரி படிப்பை முடித்தவர்கள், இடைநிற்றலுக்கு உள்ளானவர்கள், வேலையில் இருப்பவர்கள் என அனைவருக்கும் நாம் திறன் பயிற்சியை வழங்கி வருகிறோம். நீங்கள் உங்களின் வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று பல மாதங்கள் பயிற்சி எடுத்துக் கொண்டு இங்கு வந்துள்ளீர்கள். உங்களுக்கு



இருக்கின்ற இந்த எண்ணமும், ஆர்வமும் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து இளைஞர்களுக்கும் நிச்சயமாக வரவேண்டும்.

உங்களிடம் ஒரு திறமை இருப்பதே, உங்களுக்கு மிகப்பெரிய ஒரு ஊக்கம் மிக்க தைரியத்தை (கான்பிடன்ஸ் பூஸ்டர்) நிச்சயமாகக் கொடுக்கும். அது எந்தவிதமான திறமையாகவும் இருக்கலாம். வெல்டிங் ஸ்கில்லாக இருக்கலாம், கோடிங் ஸ்கில்லாக இருக்கலாம், வீடியோ எடிட்டிங் ஸ்கில்லாக இருக்கலாம் இப்படி எப்படிப்பட்ட ஸ்கில்லாகவும் இருக்கலாம்.

### முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்க்கை

நம்முடைய மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு மட்டும் போதாது. கூடுதலாக, ஏதாவது ஒரு தனித்திறமையையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றுதான் இந்த வெற்றி நிச்சயம் திட்டம் தொடங்கப்பட்டது. வெற்றி நிச்சயம் மூலமாக, சுமார் 60 ஆயிரம் இளைஞர்கள் இன்றைக்கு பயிற்சி பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். திறன் பயிற்சியில் முக்கியமான விஷயமே கற்றுக்கொண்ட திறமையை, நாம் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஏற்ப நம்மைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

ஒரு ஸ்கில் கற்றுக் கொண்ட பிறகு, அது நமக்குதான் எல்லாம் தெரியுமே என்று அமைதியாக இருந்துவிடக் கூடாது. ஏனென்றால், அப்படி அமைதியாக இருந்துவிட்டோம் என்றால், அதுவே நம்முடைய வளர்ச்சிக்குத் தடையாக இருந்துவிடும். அப்படி இல்லாமல் நம்மை நாமே வளர்த்துக் கொள்ளவேண்டும். அதற்கு இருக்கக்கூடிய சிறந்த உதாரணம். நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்க்கையை எடுத்துக்கொள்ளுங்கள். முதன்முதலில் பத்திரிகை ஆரம்பிக்கும்போது, அது ஒரு கையெழுத்துப் பிரதியாகத்தான் அவர் ஆரம்பித்தார். ஒவ்வொரு பிரதியையும் அவரே கைப்பட எழுதினார். அதன்பிறகு, அதை பிரின்ட் செய்ய ஆரம்பித்தார்.

பிரின்ட்டிங் டெக்னாலஜி வந்த பிறகு, அதை அப்டேட் செய்து, அதை பிரின்ட் செய்ய ஆரம்பித்தார். அதன்பிறகு இணையம், சமூக வலைதளம் வந்த பிறகு, அதை இணையத்தில் ஒளிபரப்ப ஆரம்பித்தார். இன்னும் சொல்லப்போனால், 90 வயது வரைக்கும் அவர் சோசியல் மீடியாவில், ஃபேஸ்புக், ட்விட்டர் (facebook, twitter)-இல் ஆக்ட்டிவாக இருந்த ஒரே தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். ஏனென்றால், அவர் காலத்துக்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக்கொண்டே இருந்தார்.

### 35 துறைகளில் பயிற்சிகள்

பயிற்சிக்கும், முயற்சிக்கும் வயது வரம்பே கிடையாது. எல்லா வயதிலும் எல்லாராலும் சாதிக்க முடியும். உங்களின் திறனை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன், நம்முடைய தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இன்றைக்குப் பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது. ஆடை, நகை வடிவமைப்பு, தகவல் தொழில்நுட்பம், எலக்ட்ரானிக்ஸ், பியூட்டிசியன்ஸ், உணவுத்துறை, விவசாயம் என கிட்டத்தட்ட 35 துறைகளில் இங்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கழகத்தின் மூலமாகப் பயிற்சி பெறக்கூடியவர்களில் 72 சதவிகிதம் பேர் சமூகத்தின் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது எங்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சி, கூடுதல் சிறப்பு. அதில் இலங்கை முகாம் வாழ் தமிழர்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள், மனநல சிகிச்சை பெற்று மீண்ட இளைஞர்கள் என பல்வேறு தரப்பினர்களும் இருக்கிறார்கள். சிறைச்சாலை சீர்திருத்தப் பயனர்கள், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், மீனவர்கள், மலைவாழ் பழங்குடியினர்கள் என அனைத்துத் தரப்பு இளைஞர்களும் இதில் பயிற்சி எடுக்க வந்திருக்கிறீர்கள். இன்னும் பயிற்சி பெற இருக்கிறீர்கள்.

நம்முடைய முதலமைச்சர், சமீபத்தில் தாயுமானவர் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அந்தத் திட்டத்தின் பயனாளிகளுக்குத் திறன் பயிற்சி கொடுக்க, முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு உத்தரவிட்டிருக்கிறார். அதன்படி, அரசுக் காப்பகத்தில் இருக்கும் ஆதரவற்ற குழந்தைகளுக்கும், ஆதரவற்றோர் காப்பகத்தில் இருக்கும் மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு தரக்கூடிய பயிற்சி இங்கே வழங்கப்பட இருக்கிறது. இதுதான் திராவிட மாடல். இப்படி ஒட்டுமொத்த சமூகத்தையும் முன்னேற்றுவதுதான் திராவிட மாடல்.

### ரூ 12 ஆயிரம் ஊக்கத்தொகை

இதில் கூடுதல் சிறப்பாகப் பயிற்சிபெற்ற, பயிற்சி பெறக்கூடியவர்களுக்கு, அவர்களின் பயிற்சியின் அடிப்படையில் ரூபாய் 12,000 ஊக்கத்தொகையும் வழங்கப்பட இருக்கிறது. தொழிற்சாலைத் திறன் பள்ளிகள் மூலமாக தொழிற்சாலைகளில் பணிபுரிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு அங்கேயே வேலைவாய்ப்பும் வழங்கப்படுகிறது. கைவினைக் கலைஞர்களுக்கும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஸ்கில் டெவலப்மென்ட் வழங்கப்படுகிறது. இவர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் உதவியும் ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது.

பயிற்சியை முடித்த உங்கள் அனைவருடைய வாழ்க்கையிலும் வெற்றி நிச்சயம் என வாழ்த்துகின்றேன்.

உங்களுக்குப் பயிற்சியை அளித்த அனைத்து நிறுவனங்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக அதிகாரிகளுக்கும், வந்திருக்கும் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.



### பங்கேற்றவர்கள்

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிராந்திகுமார் ஐ.ஏ.எஸ்., நான் முதல்வன் திட்ட தலைமை நிர்வாக அதிகாரி. ஜெயபிரகாஷ், திட்ட இயக்குநர் சாந்தி ராஜ்குமார் மற்றும் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் பயிற்சி மாணவர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (11.11.2025) சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில், கலை பண்பாட்டுத் துறையின் தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தில், 2024–2025ஆம் கல்வியாண்டில் நாட்டுப்புறக் கலையில் பகுதி நேர ஓராண்டு சான்றிதழ் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வடக்கு மண்டல பொறுப்பாளர் - எ.வ.வேலு தலைமையில் - தருமபுரியில் இன்று


# வாக்குச்சாவடி முகவர்களுக்கு "சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த (S.I.R) பயிற்சிக் கூட்டம்"!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, நவ. 13-

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், வடக்கு மண்டல பொறுப்பாளர், பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களின்



தலைமையில் தருமபுரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஐந்து சட்டமன்ற தொகுதியில் உள்ள தேர்தல் பணிக் குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆகியோர்களுக்கான சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த (S.I.R) பயிற்சி கூட்டம் இன்று (13.11.2025 - வியாழக்கிழமை) காலை 9.00 மணியளவில் அரூர், N.N மஹாலில் பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் பயிற்சி வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுசமயம் தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள், பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு பயிற்சி பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.